1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : மின்னல் வேக விரைவு வண்டிகளில் சாய்வு நாற்காலி அமைப்பதுபற்றி அரசு ஆராய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருக்கையின் இரு புறமும் கம்பிகள் தடுப்பு இருந்தால்தான், கார் வேகமாகத் திரும்பும்போது விழாமல் இருக்க முடியும். அப்படி இல்லாமலிருந்தால் வயது முதிர்ந்தவர் கீழே விழ ஏதுவாகி விடும். எனவே இதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கைகளில் கை வைப்பதற்கான அந்தக் கம்பிகள் இப்போது பொருத்தப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மின்னல் வேக வண்டிகள் ஓட்டுகிற வேகம் என்ன, 60 கிலோ மீட்டரா, இல்லை அதற்குக் குறைவா, எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச் சந்திரன் : மின்னல் வேகம் எவ்வளவோ, அவ்வளவு வேகம்தான்.

Lightning Express Buses

* 20 Q.—THIRU R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to provide inclined seats with head-rest in the lightning Express Buses plying from Madras to Madurai and *vice versa;* and

(*b*) if not, whether any step will be taken in this regard?

மின்னல் வேக விரைவு பேருந்துகள்

திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து சென்னைக்கும் போய் வந்துகொண்டிருக்கும் மின்னல் வேகப் பேருந்துகளில் உறங்கும் வசதி

யுடன் கூடிய சாய்வு இருக்கைகள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா ?

(இ) இல்லையெனில், அதுபற்றி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் மின்னல் வேகப் பேருந்துகளில் தற்போதுள்ள இருக்கை அமைப்பு சாய்ந்து கொள்வதற்கும் உறங்குவதற்கும் போதுமான அளவு வசதியுடையதாகவுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, are there any radar equipment in these lightning buses against lightning ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, no such danger is envisaged now.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

4-40 பி.ப. **மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் பற்றிய அறிவிப்புகள் 6—2—1973 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு முன்னதாகச் செயலாளரிடம் சேர வேண்டும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் சனிக்கிழமையன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்ற